# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION - **TAMIL LITERATURE**

FIFTH SEMESTER – NOVEMBER 2015

## TL 5403 - SIDDHA MEDICINE IN TAMIL LITERATURE

Date : 14/11/2015 Dept. No. Max. : 100 Marks
Time : 09:00-12:00

**பகுதி - அ**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.** (10 x 2 = 20)

01. சித்தர் என்போர் யார்?
02. சித்த மருத்துவ வரலாற்றை அறிந்து கொள்வதற்கானச் சான்றுகளில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
03. ஆதுலர் சாலைகள் - குறிப்பு வரைக.
04. நோய், பிணி , தொல்காப்பியம் தரும் பொருள் யாது?
05. எஸ்கிமோக்களின் உணவுமுறையை எழுதுக.
06. சமணர்களின் நால்வகைத் தானங்களைக் குறிக்க.
07. ஏலாதியின் கூட்டுப்பொருள்கள் யாவை?
08. பண்டாரம், அத்திப்பழம், செம்பால், மூங்கில் - இச்சொற்களுக்குத் திருமந்திரம் தரும் பொருள் யாது?
09. 'தைலத் தோணியிடல்' என்றால் என்ன?
10. மூச்சு எத்தனை நிலைகளை உடையது? அவை யாவை?

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.** ( 5 x 7 = 35 )

11. சித்த மருத்துவத்தின் சிறப்புத் தன்மைகளையும், அலோபதி மருத்துவம் வேகமாகப் பரவியதற்கானக் காரணங்களையும் விளக்குக.
12. சித்த ஆயுர்வேதபாகுபாடுகள் குறித்து எழுதுக.
13. சங்ககால மக்கள் மூலிகைகளைப் போற்றிமதித்தனர் என்ற கருத்தை நிறுவுக.
14. சிலம்பு, மணிமேகலையில் காணப்படும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.
15. நீதி நூல்கள் வழி அறியவரும் மருத்துவ ஒழுக்கமுறைகளை எழுதுக.
16. பெரியபுராணத்தின் மூலம் அறியவரும் மருத்துவக் குறிப்புகளைத் தொகுக்க.
17. தேனின் வகைகளைக் கூறி அதன் மருத்துவக் குணங்களை எழுதுக.

**பகுதி - இ**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.** ( 3 x 15 = 45 )

18. சித்த மருத்துவத்தில் சீன மருத்துவத்தின் தாக்கம் பற்றி விவரிக்க.

    **( அல்லது )**

    தொல்காப்பியத்தின் வழி அறியவரும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.

19. தமிழ் மருத்துவக்கலை எழுச்சிப்பெற்று விளங்கியதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வழி விவரிக்க.

    **( அல்லது )**

    நாட்டுப்புறப்பாடல்கள் மற்றும் பழமொழிகள் வழி அறியவரும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.

20. தியானம் செய்யும் முறைகள், பயன்கள் பற்றி விவரிக்க.

    **( அல்லது )**

    சிறப்பு யோகாசனங்கள், செய்யும் முறைகள், பயன்கள் பற்றி விவரிக்க.

---